18th November 1963]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த எக்ஸ்பர்ட் டீமை அமைக்கவேண்டுமென்று மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது ஆலோசனை வந்ததா, நிதி சம்பந்தமான விவரம் என்ன? வல்லுநர்களை அமைப்பதில் கால தாமதத்திற்கு காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஸ்பெஷல் வாட்டர் சப்ளை இன்வெஸ்டிகேஷன் டிவிஷன் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து ஆலோசனை வந்தது. அது பற்றி ஆவன செய்யும் போது மாநில சர்க்காரின் ஆலோசனையை கேட்பார்கள்.

Schedule of rates (contracts)

*124 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that 10 per cent increase in the schedule of rates to the rates of 1961–62 has been given in Dharmapuri and Omalur taluks in Salem district;

(*b*) whether the Government are aware that Pennagaram block area will be benefited by 35 per cent above the scheduled rates, whereas Dharmapuri, Palacode and Nallampalli areas are benefited only by 10 per cent of the rates;

(*c*) whether the Government are aware that contractors are not forthcoming to take up the works in Dharmapuri, Palacode and Nallampalli areas since the schedule of rates are not encouraging; and

(*d*) if so, will the Government come forward to keep the Dharmapuri, Palacode and Nallampalli blocks on a par with the Pennagaram Block in the schedule of rates ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) It is a fact that in the schedule of rates for Salem district for the year 1962-1963, for areas covered by Omalur taluk and Dharmapuri, Palacode and Nallampalli Block areas of Dharmapuri taluk, a 10 per cent increase over the general rates has been allowed.

(*b*) For the Pennagaram Block area, an increase of only 25 per cent over the general rates for the district has been allowed and not 35 per cent as stated by the Member in his question.

(*c*) It is reported that the contractors in sufficient numbers are not forthcoming to take up works in Dharmapuri, Palacode and Nallampalli Block areas as they are not willing to go and undertake works at places far away from their regular places of habitation.

(*d*) In view of the difficulties experienced in getting contractors in sufficient numbers to take up works in Dharmapuri, Palacode and Nallampalli Block areas, a 25 per cent increase over the general rates has been allowed in the schedule of rates for 1963-64 for the entire Dharmapuri taluk (which comprises Dharmapuri,

[18th November 1963

Palacode, Pennagaram and Nallampalli Blocks), thus bringing Dharmapuri, Palacode and Nallampalli Block areas on a par with Pennagaram Block area.

வைகை கால்வாய் சீர்திருத்த திட்டம்

*219 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி, திரு. செ. சீனிவாசன் : } கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை கால்வாயை சீர்திருத்தும் திட்டத்திற்கான பூர்வாங்க சர்வே வேலைகள் முடிந்துவிட்டனவா?

(இ) ஆமென்றால் அவ்வேலை எப்போது துவங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The re-investigation of the scheme for modernizing the Vaigai Channels has just been completed. The revised proposals are under scrutiny by the Chief Engineer (Irrigation) and the scheme will be taken up for execution after the proposals are sanctioned by the Government.

திரு. கரு. சீமைச்சாமி : சார், கடந்த இரண்டாண்டு காலமாக வைகை திட்டத்தை நவீன முறையாக அமைக்க பூர்வாங்க வேலைகள் செய்ய முடிவு எடுத்திருக்கிறோம் என்று கூறி வந்து இருக்கிறார்கள். அதில் எவ்வளவு நாளைக்கு இன்னும் காலதாமதம் ஏற்படும்? இந்தத் திட்டத்தை உடனடியாக அமுலாக்க ஆவன செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரை அவசரப்பட்டு செய்வதில் லாபம் இல்லை. இந்தப் பாசனம் நீண்ட காலத்திற்கு இருக்கக்கூடியது. முதலில் குறைபாடுகள் இருந்தன. இன்வெஸ்டிகேஷன் செய்த காரணத்தினால் ஒரு நல்ல திட்டமாக உருவாக்கி பாசனத்திற்கு உதவியாக செய்ய வேண்டும் என்பது எண்ணம். இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு ஒரு சிறு திட்டத்தை உருவாக்கியிருந்தார்கள். அதை நிபுணர்களை வைத்து பரிசீலிக்கும்போது அந்தத் திட்டம் வைகை பாசன கால்வாய்களுக்கு பெரும் உதவியாக இருக்காது என்று தெரிந்தது. ஆகவே மீண்டும் நல்லபடியாக இன்வெஸ்டிகேஷன் செய்து ஒரு புது திட்டத்தை உருவாக்க சீப் எஞ்சினியர் பரிசீலனை செய்து வருகிறார்கள்.

SRI R. V. SWAMINATHAN : May I know the area and villages which will get benefit under this scheme?

THE HON. SRI V. RAMAIAH : Actually this is to benefit the entire Vaigai Irrigation System as such.

திரு. கரு. சீமைச்சாமி : வைகை கால்வாயை நவீனமாக்க சென்ற பட்ஜெட்டிலேயே பணம் ஒதுக்கப்பட்டது. அது எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : தனிக் கேள்வி போட வேண்டும்.